| | |
|---|---|
| **Publication** | Dinamani |
| **Edition** | Chennai |
| **Date** | 06/01/2011 |
| **Page** | 03 |


# ஆஸ்திரேலிய கணக்கியல் ஐ.சி.டபிள்யூ.ஏ.ஐ. ஒப்பந்தம்

## ரூ.8,400—ல் சான்றிதழ் படிப்பு அறிமுகம்

**சென்னை, ஜன. 5:** இந்திய உற்பத்திச் செலவு மற்றும் மேலாண்மைக் கணக்கியல் நிறுவனம் (ஐ.சி.டபிள்யூ.ஏ.ஐ.), ஆஸ்திரேலியாவின் தேசிய கணக்கியல் மையத்துடன் (என்.ஐ.ஏ.) புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்ய உள்ளது. மேலும் கிராமப்புற மாணவர்கள் பயன்பெறும் வகையில் ₹ 8,400-ல் காஸ்ட் அக்கவுன்டிங் சான்றிதழ் படிப்பை அறிமுகம் செய்ய உள்ளதாக ஐ.சி.டபிள்யூ.ஏ.ஐ. நிறுவனத் தலைவர் பிரிஜ்மோகன் சர்மா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் புதன்கிழமை நிருபர்களிடம் பிரிஜ்மோகன் சர்மா கூறியது:

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம், ஜனவரி மாத இறுதியில் கையெழுத்தாக உள்ளது.

அதேபோல, அமெரிக்காவின் மேலாண்மை கணக்கியல் நிறுவனத்துடனும் (ஐ.எம்.ஏ.) விரைவில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட உள்ளது.

சர்வதேச நிதிஅறிக்கை தர நிலைகள் (ஐ.எஃப்.ஆர்.எஸ்.) சான்றிதழ் படிப்பை ஆன்-லைன் மூலம் கற்றுத்தர முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதுதவிர காஸ்ட் அக்கவுன்டிங் தொடர்பான சான்றிதழ் படிப்பின் மூலம் இளநிலை பணியாளர் பணிக்குச் செல்வோரின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியும். நாட்டில் உள்ள 423 மையங்களில், இந்த சான்றிதழ் படிப்பு தொடங்கப்படும்.

தணிக்கை துறையில் தரத்தை உறுதிபடுத்தி கண்காணிக்கும் வகையில் ஒரு தனி அமைப்பு தொடங்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்கு இந்திய உற்பத்திச் செலவு மற்றும் மேலாண்மை கணக்கியல் நிறுவனம் ஆதரவு அளிக்கிறது. அந்த தனி அமைப்பு பொது நிறுவன கணக்கு கண்காணிப்பு வாரியமாக (பி.சி.ஏ.ஓ.பி.) அமையும்.

இந்த வாரியம் செயல்பாட்டுக்கு வரும்போது சத்யம் நிறுவன பங்கு மோசடி, சிட்டி வங்கி மோசடி போன்ற கோடிக்கணக்கிலான பல்வேறு முறைகேடுகளை தடுத்திட முடியும். இந்த வாரியத்தை அமைப்பது பற்றி மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது என்றார் பிரிஜ்மோகன் சர்மா.

### தேசிய தணிக்கையாளர்கள் மாநாடு இன்று தொடக்கம்

**சென்னை, ஜன. 5:** 53-வது தேசிய தணிக்கையாளர்கள் மாநாடு 2011 மாநாடு சென்னையில் வியாழக்கிழமை தொடங்குகிறது.

இந்த மாநாட்டு தொடக்க நிகழ்ச்சியில் மத்திய நிதித்துறை இணையமைச்சர் எஸ்.எஸ்.பழனிமாணிக்கம், கம்பெனி விவகாரத் துறையின் செயலாளர் ஆர். பந்தோபாத்யாய ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் வி.நாராயணசாமி, ஆந்திர மாநில அமைச்சர் தோட்டா நரசிம்மன் ஆகியோர் மாநாட்டு நிறைவு விழா நிகழ்ச்சியில் பங்கேற்க உள்ளனர் என்றார் ஐசிடபிள்யுஏஐ நிறுவனத் தலைவரான பிரிஜ் மோகன் சர்மா.